# மீனம்பாக்கம், ஐகோர்ட்டு மெட்ரோ ரெயில் நிலையங்களில் கலை நிகழ்ச்சி

## கொரோனா வைரஸ் பரவலை தடுக்க விழிப்புணர்வு

சென்னை, நவ.23-

'மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வது பொதுமக்களுக்கும், பயணிகளுக்கும் பாதுகாப்பானது' என்று வலியுறுத்தும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்காக, மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில்களில், கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளை, நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து நடத்த முடிவு செய்தது. இதன்படி, மீனம்பாக்கம் மெட்ரோ ரெயில் நிலையத்தில், நேற்று முன்தினம் மாலை 6½ மணி முதல், இரவு 8½ மணி வரையும், ஐகோர்ட்டு மெட்ரோ ரெயில் நிலையத்தில், நேற்று காலை 10 மணி முதல் 11 மணி வரையும் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. இதனை பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் கண்டு களித்தனர்.